SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
CENTRE FOR EXTERNAL DEGREES AND PROFESSIONAL LEARNING

# SECOND EXAMINATION IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION (EXTERNAL) – 2011/2012

HELD IN JUNE / JULY 2013

## BBA 23 – BUSINESS LAW

எவையேனும் ஐந்து (05) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக. நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

1. i. முகவராண்மை தொடர்பான சட்டத்தை விரிவாக உதாரணங்களுடன் ஆராய்க.
(10 புள்ளிகள்)

ii. முகவரின் உரிமைகள், கடமைகளைத் தருக
(10 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

2. i. ஒப்பந்தமொன்றின் முக்கிய கூறுகளைக் குறிப்பிட்டு அவை எவ்வாறு ஒப்பந்தமொன்றை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு உதவுகின்றது என்பதை விளக்குக.
(12 புள்ளிகள்)

ii. ஒப்பந்தமொன்று வலிதற்றதாகுவதற்கான சந்தர்ப்பங்களைக் உதாரணங்களுடன் குறிப்பிடுக
(08 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

3. i. கம்பனிச்சட்டம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னணியினை விளக்குக.
(05 புள்ளிகள்)

ii. நிறுவனமொன்று கம்பனியாக கூட்டிணைக்கப்படும்போது அது எத்தகைய தனித்துவமான பண்புகளைக் கொண்டு விளங்கும் என உதாரணங்கள், வழக்குகளின் துணைகொண்டு விளக்குக.
(15 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

4. i. ஆங்கிலச் சட்டம் இலங்கையில் எப்போது, எவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்டது என்பதை விளக்குக
(06 புள்ளிகள்)

ii. தனியார் சட்டங்களின் வகைகளைக் குறிப்பிட்டு அவை வர்த்தக சட்டத்தில் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்துகின்றது என விளக்குக.
(14 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

5. i. பங்கு என்றால் என்ன என்பதை வரைவிலக்கணப்படுத்தி அவற்றின் வகைகளை உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட 2007ஆம் ஆண்டின் கம்பனிச் சட்டத்தின் சிறப்பம்சங்களை ஆராய்க.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

6. i. விற்பனை ஒப்பந்தமொன்றின் கூறுகளை விரிவாக குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

ii. நிபந்தனைகள் (Conditions) மற்றும் உத்தரவாதங்கள் (Warrantee) என்பவைகளுக்கிடையிலான வித்தியாசத்தை உதாரணங்களுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

iii. கொடுப்பனவு செலுத்தப்படாத (unpaid seller) விற்பனையாளரின் உரிமைகள் யாவை.

(07 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

7. i. "தனியார் வியாபார முறையை விட பங்குடமையொன்றினூடாக வியாபாரமொன்றை மேற்கொள்வது பல நன்மைகளைக் கொண்டதாகும்." ஒப்பிட்டு ஆராய்க.

(10 புள்ளிகள்)

ii. பங்குடமையின் வேறுபட்ட வடிவங்களை உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

8. i. தீங்கு தொடர்பான (Tort) சட்டம் வளர்ச்சியடைவதற்கான காரணங்களை விளக்குக.

(05 புள்ளிகள்)

ii. தீங்கு ஒன்றை நிரூபிப்பதற்கு அவசியமான அம்சங்களைக் குறிப்பிடுக.

(08 புள்ளிகள்)

iii. வர்த்தகம் தொடர்பான தீங்குகள் (Business Torts) எவ்வகையில் நிகழலாம் என்பதைத் தக்க ஆதாரங்களுடன் விளக்குக.

(07 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)